



## கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு சார்பில் ரமலான் நோன்பு திறப்பு:

# தி.மு.க.வுக்கும் இஸ்லாமியர்களுக்கும் உள்ள உறவை, எவ்வளவு சூழ்ச்சிகள் செய்தாலும் யாராலும் பிரிக்க முடியாது!

### சென்னை, புதுக்கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!

**சென்னை, மார்ச் 18-**

**சென்னை, புதுக்கல்லூரியில், கழகத்தின் சிறுபான்மை நல உரிமைப் பிரிவு ஏற்பாடு செய்திருந்த ரமலான் நோன்பு திறப்பு நிகழ்ச்சியில், கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.**

**அப்போது அவர், ``நம் கழகத் தலைவர் அவர்களுக்கு நீங்கள்தான் பக்கபலமாகவும் உறுதுணையாகவும் இருந்து வருகிறீர்கள். நமக்குள் இருப்பது சகோதர பாசம். எவ்வளவு முயற்சிகள் நடந்தாலும், எவ்வளவு சூழ்ச்சிகள் செய்தாலும் தி.மு.கவுக்கும் இஸ்லாமிய பெருமக்களுக்கும் இடையே இருக்கின்ற உறவை யாராலும் பிரிக்க முடியாது" என்று குறிப்பிட்டார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய சிறப்புரை வருமாறு:**

இன்று இந்த இப்தார் நோன்பு திறக்கின்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த சகோதரர் சுபேர்கான் அவர்களுக்கு முதலில் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வந்திருக்கக்கூடிய உங்கள் அனைவருக்கும் என் ரம்ஜான் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

#### ஒரே கொள்கை

நேற்று, கழகத் தலைவர் அவர்கள், இப்தார் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றினார்கள். சமத்துவத்தை, அன்பை, ஈகை குணத்தைப் போதிக்கின்ற மார்க்கம் நம் இஸ்லாம். திராவிட இயக்கத்தின் கொள்கையும் இஸ்லாத்தின் கொள்கையும் அடிப்படையில் ஒன்றுதான். இன்னும் ஒரே வார்த்தையில் சொல்ல வேண்டுமென்றால், மனிதநேயம் மட்டும்தான் நம் அடிப்படை, ஒரே கொள்கை. அதனால் தி.மு.க ஆரம்பித்த நாளிலிருந்து இந்த இயக்கத்துக்கு, நீங்கள் அத்தனை பேரும் பக்கபலமாக இருந்து வருகிறீர்கள்.

#### பிரிக்கவே முடியாது

இன்றைக்கும் நம் கழகத் தலைவர் அவர்களுக்கும் நீங்கள்தான் பக்கபலமாகவும் உறுதுணையாகவும் இருந்து வருகிறீர்கள். நமக்குள் இருப்பது சகோதர பாசம். எவ்வளவு முயற்சிகள் நடந்தாலும், எவ்வளவு சூழ்ச்சிகள் செய்தாலும் தி.மு.கவுக்கும் இஸ்லாமியப் பெருமக்களுக்கும் இடையே இருக்கின்ற உறவை யாராலும் பிரிக்கவே முடியாது.

கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன் முதன்முறையாக மிலாது நபிக்கு அரசு விடுமுறை அறிவித்தவர் டாக்டர் கலைஞர் அவர்கள். உருது பேசும் முஸ்லிம்களைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்தவரும் டாக்டர் கலைஞர் அவர்கள்தான்.

இன்னும் சொல்லப்போனால், இட ஒதுக்கீட்டில் இஸ்லாமியர்களுக்குப் பிற்படுத்தப்பட்டோர் இட ஒதுக்கீட்டில் 3.5 சதவிகிதத்தைக் கொடுத்தவரும் டாக்டர் கலைஞர் அவர்கள்தான். காயிதே மில்லத் அவர்களின் பெயரை கல்லூரிக்குச் சூட்டியவர். இப்படி இஸ்லாமியர்களுக்காக, கலைஞர் செய்ததை நான் அடுக்கிக் கொண்டே போகலாம். அந்த வழியில், நம் முதலமைச்சர் அவர்களும் இன்றைக்குத் திராவிட மாடல் ஆட்சியும் இஸ்லாமியர்களுக்குப் பல்வேறு திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்துகிறோம்.



#### ஹஜ் புனிதப் பயணம்

ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்ளும் இஸ்லாமியர்களுக்காக 39 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு ஹஜ் இல்லம் கட்ட அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. தொன்மையான பள்ளிவாசல்கள் மற்றும் தர்காக்களை எல்லாம் புனரமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இன்றைக்கு 10 தர்காக்கள் மேம்படுத்தப்பட்டிருக்கின்றன. உலமாக்களின் ஓய்வூதியம் 3,000 ரூபாயிலிருந்து இன்றைக்கு நம் முதலமைச்சர் அதை 5,000 ரூபாயாக உயர்த்திக் கொடுத்திருக்கிறார்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் கூடுதலாக ஒரு வக்ஃபு வாரியத்தையும் அமைப்பதற்கான முயற்சியை நாம் செய்திருக்கிறோம். இப்படி இன்னும் பல திட்டங்களை நான் வரிசைப்படுத்திச் சொல்ல முடியும். எல்லாவற்றுக்கும் மேலாக எப்பொழுதுமே சிறுபான்மை மக்களுக்குப் பாதுகாப்பு அரணாக, காவல் அரணாக இருப்பது நம் திராவிட முன்னேற்றக் கழகம்தான். ஆட்சியில் இருக்கும் போதும் சரி, இல்லாதபோதும் சரி எப்போதுமே உங்களுக்கான முதல் குரல் கொடுக்கிற இயக்கம் நம் திராவிட முன்னேற்றக் கழகம் என்று சொன்னால், அது மிகையாகாது.

#### என் முதல் போராட்டம்

சிறுபான்மை மக்களை அச்சுறுத்துகின்ற வகையில், 2019ஆம் ஆண்டு, ஒன்றிய பா.ஜ.க. அரசு சி.ஏ.ஏ. சட்டத்தைக் கொண்டு வரும்போது அதை எரித்ததும், நான் கைது செய்யப்பட்டதும் என் முதல் போராட்டம் என்று நான் அடிக்கடி பெருமையாகச் சொல்லியிருக்கிறேன். இன்றைக்கு நாடு இருக்கின்ற நிலைமை, உங்கள் அனைவருக்கும் தெரியும்.

நாடு முழுவதும் பல மாநிலங்களில் சிறுபான்மை மக்கள் பல தாக்குதலுக்கு ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள். அசாம் மாநிலத்தின் பா.ஜ.க. முதலமைச்சர், இஸ்லாமியர்களைக் குறிவைத்துத் தாக்குவது போன்ற ஒரு வீடியோவை அவரே வெளியிட்டிருக்கிறார். பா.ஜ.கவின் முதலமைச்சரே இப்படி நடந்துகொண்டார் என்றால், மற்றவர்களைப் பற்றி நான் உங்களிடம் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.

சிறுபான்மை மக்களின் மேல் தினந்தோறும் ஒன்றிய பா.ஜ.க. அரசு வெறுப்பைப் பரப்பிக் கொண்டே இருக்கிறது. அந்த வெறுப்புப் பிரச்சாரத்தால்தான் இன்றைக்கு பா.ஜ.க. வளர்ந்து கொண்டிருக்கிறது. பா.ஜ.க.வின் வளர்ச்சியைத் தடுக்க வேண்டும் என்றால், அதற்கு ஒரே வழி நாமெல்லாம் சேர்ந்து அன்பைப் பரப்ப வேண்டும், சகோதரத்துவத்தைப் பரப்ப வேண்டும்.

இந்த மண்ணில் அந்தப் பணியை வெற்றிகரமாகச் செய்யக்கூடிய ஒரே இயக்கம் நம் திராவிட முன்னேற்றக் கழகம். தி.மு.கழகம் இருக்கின்ற வரைக்கும் பா.ஜ.கவின் திட்டம் எதுவுமே தமிழ்நாட்டில் நிச்சயம் பலிக்கவே பலிக்காது. தி.மு.க. மேல் சிறுபான்மை மக்களுக்கு இருக்கக்கூடிய அந்தப் பாசத்தையும் நம்பிக்கையையும் பா.ஜ.க.வினால் இன்றைக்குத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அதனால்தான் தி.மு.க.வின் மீது இன்றைக்கு பா.ஜ.க. கடுங்கோபத்தில் இருக்கிறது. பா.ஜ.க. எவ்வளவு கோபப்பட்டாலும், எவ்வளவு தொந்தரவு கொடுத்தாலும் தி.மு.க. எப்போதும் உங்களுக்கு உறுதியாக நிற்கும், காவல் அரணாக நிற்கும்.

ஆனால், சிறுபான்மை மக்களின் நலன் பற்றி, கொஞ்சம்கூடக் கவலைப்படாமல் பா.ஜ.க.வுடன் இன்றைக்கு அ.தி.மு.க. கை கோத்திருக்கிறது.

எடப்பாடி நம்பிக்கை துரோகம்

இனி எப்போதுமே பா.ஜ.கவுடன் கூட்டணி இல்லை என்று சொன்ன எடப்பாடி பழனிசாமி அவர்கள் மறுபடியும் கூட்டணி வைத்திருக்கிறார். உங்களுக்கெல்லாம் நம்பிக்கை துரோகம் செய்திருக்கிறார். எடப்பாடி பழனிசாமி செய்திருக்கக்கூடிய இந்தத் துரோகத்தைச் சிறுபான்மை மக்கள் மட்டும் அல்ல, ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களும் நிச்சயம் மன்னிக்கவே மாட்டார்கள்.

#### நெருங்கவே முடியாது

இன்றைக்கு பா.ஜ.க.வின் ஒரு முகமூடியாக அ.தி.மு.க.மாறியிருக்கிறது. அடிமைக் கட்சிகளை எல்லாம் மிரட்டி இன்றைக்குக் கூட்டு சேர்த்து கொண்டு தமிழ்நாட்டுக்குள் எப்படியாவது நுழைந்துவிடலாம் என்று பா.ஜ.க. முயற்சி செய்துகொண்டிருக்கிறது. தி.மு.க. என்ற பலம்பொருந்திய கட்சி இருக்கின்ற வரைக்கும், நாம் இருக்கின்ற வரைக்கும் தமிழ்நாட்டை அவர்களால் நெருங்கவே முடியாது, தொட்டுக்கூடப் பார்க்க முடியாது.

நம் கழகத் தலைவர் அவர்களும் தி.மு.கவும் என்றைக்குமே உங்களுக்குத் தோழனாக, துணையாக எப்போதுமே இருப்போம். அதேபோல கழகத் தலைவர் அவர்களுக்கு இஸ்லாமியப் பெருமக்களாகிய நீங்கள் என்றைக்குமே ஆதரவாக இருக்க வேண்டும் என்று உங்களையெல்லாம் உரிமையோடு கேட்டுக்கொள்கின்றேன். நாம் அனைவரும் இணைந்துதான் தமிழ்நாட்டின் தனித்துவத்தைக் காப்பாற்ற வேண்டும். சமூக நல்லிணக்கத்தை, ஒற்றுமையை வளர்க்க வேண்டும். வெறுப்பை ஒழித்து அன்பைப் பரப்ப வேண்டும்.

சிறுபான்மை மக்களுக்கு என்றைக்கும் பாதுகாப்பு அரணாக இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்தை, நீங்கள் தொடர்ந்து ஆதரிக்க வேண்டும் என்று உங்களையெல்லாம் உரிமையோடு கேட்டுக்கொண்டு, உங்கள் அனைவருக்கும் மீண்டும் என் ரம்ஜான் வாழ்த்துகளைத் தெரிவித்து, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரையாற்றினார்.

#### பங்கேற்றவர்கள்

அமைச்சர் சா.மு.நாசர், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், திண்டுக்கல் ஐ.லியோனி, நீதியரசர் அக்பர் அலி, மாவட்டக் கழகச் செயலாளர்கள் சிற்றரசு, செஞ்சி மஸ்தான், சட்டமன்ற உறுப்பினர் அசன் மௌலானா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.எம். ஆரூண், அப்துல்லா, டி.பி.எம்.மைதீன்கான், சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவின் செயலாளரும் வக்ஃபு வாரியத்தின் உறுப்பினருமான மருத்துவர் சுபேர்கான், துறைமுகம் காஜா, இறையன்பன் குத்தூஸ், பகுதிக் கழகச் செயலாளர்கள் மதன்மோகன், ஏ.ஆர்.பி.எம்.காமராஜ், கழக நிர்வாகிகள் ஜோசப் ராஜா, ஜெரால்டு அன்வர் கான், சபில், ஷேக் அப்துல்லா, நூருல்லா, முனைவர் ஜான், விஜயகுமார், ரபீ அகமது, அன்வர் அலி, ஷாகுல் ஹமீது, பொன்சீலன், ராபர்ட் ராஜதுரை, ராஜேஷ் ஜெயின், ஷேக் இஸ்மாயில், ரஹ்மத்துல்லா, ஷஃபி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பிரகாஷ், ஷியா பிரிவு தமிழ்நாடு அரசின் தலைமை காஜி மௌலானா குலாம் முகமது மெஹதிகான், விளையாட்டு மேம்பாட்டு அணியின் துணைச் செயலாளர் இஷ்ரத், மாநிலத் தகவல் ஆணையர் ஷக்கில் அக்தர் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.



நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் நாங்குநேரி சட்டமன்ற தொகுதி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நாங்குநேரி அழகு மகாலில் நெல்லை கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியை ராதாபுரம் மேற்கு ஒன்றியச் செயலாளர் ஜோசப் பெல்சி தொகுத்து வழங்கினார். இந்நிகழ்வில் முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் பங்கேற்று பல்வேறு ஆலோசனைகளை வழங்கி உரையாற்றினார். நிகழ்வில் முன்னாள் எம்.பி.க்கள் ரவீந்திரநாத், கோபாலகிருஷ்ணன், முன்னாள் எம்.எல்.ஏ., அய்யப்பன், கழக நிர்வாகிகள் ஜார்ஜ் கோசல், ஹரி கிருஷ்ணன், சந்திரகலா, சித்திக், போர்வல் கணேசன், வேலங்குளம் கண்ணன், ராஜன், சுடலைக்கண்ணு, செல்வ கருணாநிதி, ராஜாஞான திரவியம், மணி சூரியன், பரமசிவ அய்யப்பன், கனகராஜ், சாந்தி சுபாஷ், முருகையா பாண்டியன், சேதுராமலிங்கம், அழகுமுத்து உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




சிவகாசியில் கேஸ் சிலிண்டர் தட்டுப்பாடு இன்றி வழங்கக் கோரி ஒன்றிய அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் சிவகாசி மாநகரச் செயலாளர் உதயசூரியன் தலைமையில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு முக்குலத்தோர் புலிப்படை தலைவர் கருணாஸ் ஆர்ப்பாட்டம் முழக்கம் செய்தார். இதில் தொழிற்சங்க நிர்வாகிகள், தி.மு.க. கூட்டணியைச் சார்ந்த அனைத்துக் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.